8

# கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்
## முன்னிலை: டாக்டர்.க.விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப.,

ந.க.எண்.2472/2018/எம்.எச்.4(தெ) நாள். .08.2018.

பொருள்: மனை வரன்முறை செய்தல் – கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் – குனியமுத்தூர் கிராமம், க.ச.எண்.500/1, 2A, 2B, 3A, 3B, 4A, 4B, 5A மற்றும் 5B–ல் வரன்முறை செய்யப்பட்ட மனைப்பிரிவு ம.வ/(கோ.உதி.கு) வரன்முறை எண்.185/2018–ல் – மனைபரப்பு 6.00 ஏக்கர் (அ) 261360 ச.அடி முறைபடுத்தி உத்திரவிடுதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (ந.வ.4(3)) துறை நாள்.04.05.2017.
2. அரசாணை (நிலை) எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (ந.வ.4(3)) துறை நாள்.13.10.2017.
3. உறுப்பினர் செயலர் கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் நடவடிக்கைகள்.ந.க.எண்.DTCP/L/0045095/2017, நாள்.02.03.2018.
4. திரு.S.M.நூருதீன் ஷாஜஹான் அவர்களின் விண்ணப்பம் நாள்.09.04.2018.

********

உத்திரவு:

பார்வை 4–ல் காண் தங்களது விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டது. கோயம்புத்தூர் மாநகராட்சி, குனியமுத்தூர் கிராமம், க.ச.எண்.500/1, 2A, 2B, 3A, 3B, 4A, 4B, 5A மற்றும் 5B–ல் பார்வை 1 மற்றும் 2–ல் காண் அரசாணையில் தெரிவிக்கப்பட்ட விதிமுறைகளின் படி பார்வை 3–ல் காண் கடிதத்தின் படி வரன்முறை செய்யப்பட்ட மனைபரப்பு 6.00 ஏக்கர் (அ) 261360 ச.அடி–ல் மனை எண்கள். 1, 2, 3, 5, 6, 7, 13, 26, 29, 31, 32, 33, 34, 35, 55, 58, 59, 60, 61, 100, 105, 107, 111, 120, 122, (122A-பூங்கா ஒதுக்கீடு நீங்கலாக), 123, 126, 127, 128 மற்றும் 129 மொத்தம் 30 மனைகள், 39347.0 ச.அடி–க்கு அரசாணை மற்றும் கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமத்தால் மனைப்பிரிவு ம.வ/(கோ.உ.தி.கு) வரன்முறை எண்.185/2018–ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு முறைப்படுத்தி உத்திரவிடப்படுகிறது.

ஆணையாளருக்காக,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

பெறுநர்:

திரு.S.M.நூருதீன் ஷாஜஹான்,
AMI Mid Town,
25A– 4,1, D.B.ரோடு,
R.S.புரம்,
கோயம்புத்தூர்–45.

நகல்: உதவி ஆணையர், தெற்கு மண்டலம், கோயம்புத்தூர் மாநகராட்சி.

R. Mohan Soodha

Orig

9

# கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் (பொறுப்பு) அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு. S. தனராசு, பி.இ.,

பதிவு.எண். DTCP / L / 0045095 / 2017 நாள்:02.03.2018

ஐயா,

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 - கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட குழுமம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் - குனியமுத்தூர் கிராமம்- க.ச.எண். 500/1, 2A, 2B, 3A, 3B, 4A, 4B, 5A மற்றும் 5B -ல் 6.00 ஏக்கர் (அ) 261360 ச.அடி பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவு - கொள்கை அளவிலான (In Principle) மனைப்பிரிவு ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக

பார்வை:
1. அரசாணை (நிலை) எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (ந.வ.4(3) த் துறை நாள். 04.05.2017
2. அரசாணை (நிலை) எண். 172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (ந.வ.4(3) த் துறை நாள். 13.10.2017
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டு நெறிமுறைகள் கடிதம் ந.க.எண். 13193/2017 நாள். 30.10.2017, 31.10.2017, 03.11.2017, 07.11.2017, 14.11.2017 மற்றும் 17.11.2017
4. Online Application No. DTCP/ L/ 0045095/2017நாள்.18.01.2018

*****

**ஆணை:**

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டகுழுமம் பகுதி, கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலம், குனியமுத்தூர் கிராமம், க.ச.எண். 500/1, 2A, 2B, 3A, 3B, 4A, 4B, 5A மற்றும் 5B -ல் 6.00 ஏக்கர் (அ) 261360 ச.அடி பரப்பளவிலான அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன்முறைபடுத்த கோரிய பார்வை 4-ல் சுட்டிய online விண்ணப்பம் பரிசீலினை செய்யப்பட்டு, பார்வை 1 மற்றும் 2ல் சுட்டிய அரசாணைகளில் அறிவிக்கப்பட்ட 2017 – ம் ஆண்டு ஒப்புதல் பெறாத மனைகள் மற்றும் மனைப்பிரிவுகள் வரன்முறைபடுத்துதல் விதி எண். 2(2) ii–ன்படி கொள்கை அளவிலான (In Principle) மனைப்பிரிவு வரைபடம் தயார் செய்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/கோ.உ.தி.கு(வரன்முறை)எண்:185/2018** என்று எண்ணிடப்பட்டு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

பரிசீலனைக் கட்டணமாக அரசாணை விதி 12-ன்படி ஒவ்வொரு மனைக்கும் ரூ. 500/- வீதம் பெறப்பட வேண்டும்.

**மனுதாரரால் செலுத்தப்பட வேண்டிய இதர கட்டணங்கள் :**

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | - 6.00 ஏக்கர் (அ) 261360 ச.அடி |
| மொத்த மனைகளின் எண்ணிக்கை | - 130 Nos |
| விற்பனை செய்யப்பட்ட மனைகள் | - 100 Nos |
| விற்பனை செய்யப்படாத மனைகள் | - 30 Nos |
| மொத்த விற்கப்படாத மனையின் பரப்பு | - 39347.0 ச.அடி |
| மனையின் வரன்முறை கட்டணம் | - ரூ.100/- ச.மீ |
| மனைகளின் அபிவிருத்திக் கட்டணம் | - ரூ.500/- ச.மீ |

R. Mohan Soudha

அரசாணை (நிலை) எண். 172, விதி 7(g)(ii) –ன் படி-மனைப்பிரிவில் அமையும் சாலைகள், பூங்கா போன்ற பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியால் சுயமாக ஏற்றுக்கொண்டதாக கருதவேண்டும்.

ஒதுக்கப்பட்ட பொதுதிறவிட பரப்பு - 4858.0 ச.அடி (12.34 % of Unsold Plot)

1. மேலும் அபிவிருத்திக் கட்டணம், வரன்முறை கட்டணம் ஒவ்வொரு தனித்த மனைக்கும் அரசாணை எண். 172 –ன்படி விதி 6 for rule 10 –ன்படி வரன்முறைக்கட்டணம் மாநகராட்சிக்கு ரூ.100/- ச.மீக்கு என்ற வீதத்திலும் அபிவிருத்திக் கட்டணம் ரூ. 500/- ச.மீ என்ற வீதத்தில் ஒவ்வொரு மனையின் பரப்பிற்கு தகுந்தார்போல் கட்டணம் பெற்றுக்கொண்டு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

2. அபிவிருத்திக்கட்டணத்தை உள்ளாட்சி பெறப்பட்டு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் தனி கணக்கு துவங்கி அதில் வரவு வைக்கப்பட வேண்டும். இந்நிதியை வேறு பயன்பாடு எதற்கும் பயன்படுத்துதல் கூடாது.

3. வரன்முறை கட்டணத்தை அரசுக் கணக்கில் கீழே குறிப்பிட்டுள்ள கணக்கு தலைப்பில் செலுத்தி அதன் விபரத்தையும் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

0217 – Urban Development
60 – Other Urban Developmnt Scheme
800 – Others Receipt
AT – Receipts under Regularization Charges of
Unapproved layouts and Plots – DTCP
(D.P.C : 0217 – 60 – 800 – AT – 0007)

**விதி -4 ன்படி**

(i) நீர்நிலைகள், (ii) அரசு புறம்போக்கு, (iii) திறந்தவெளி ஒதுக்கீடு, (iv) அடுத்த நிலத்திற்கு வழியாக அமையும் காலிமனை, (v) உத்தேச சாலை மற்றும் Rail Corridors, (vi) பொது பாதை மற்றும் நில உச்சவரம்பு சட்டத்தின்படி உள்ள மனையிடம், (vii) அதிக உயர்மின்னழுத்த பாதை கீழ் மனைகள் மேற்கண்டவற்றில் அமையும் மனைகளை வரன்முறைப்படுத்துதல் கூடாது. மேற்கண்டவாறு அமையவில்லை என்பதனை உறுதிசெய்தபின் மனைகளை வரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

**விதி -14ல் 10- ன்படி**

மேலும் ஒவ்வொரு மனைக்கும் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் கேட்பு (Demand Notice) செய்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். தவறும்பட்சத்தில் ஆண்டுக்கு 6% என்ற வீதத்தில் வட்டியுடன் செலுத்தப்பட வேண்டும் என் சம்மந்தப்பட்ட உரிமையாளருக்கு தெரிவிக்கப்பட வேண்டும். 90 நாட்களுக்கு மேல் ஆகும் பட்சத்தில் உத்தேசம் மற்றும் அனுமதி மறுத்து திருப்பப்பட வேண்டும்.

R. Mohan Sowdha

1 11

விதி -15- ன்படி

மனைப்பிரிவு கட்டமைப்பு (Frame Work) செய்த இம்மனைப்பிரிவில் அமையும் மனைகளின் உரிமையாளர்கள் தனி மனையை வரன்முறைப்படுத்தப்படாதிருப்பின், மின்சாரம், குடிநீர், கழிவுநீர் வடிகால் அமைப்பு துண்டிக்கப்பட வேண்டும். மேலும் எந்தவொரு கட்டிடத்திற்கும் கட்டிட அனுமதி வழங்கக்கூடாது என தெரிவிக்கப்படுகிறது.

விதி 20- ன்படி பொறுப்புத் துறப்பு

இவ்விதிகளின்படி Frame Work செய்யப்படும் மனையில் அமையப்பெற்ற கட்டிடத்தை வரன்முறை செய்யப்பட்ட கட்டிடமாக கருதலாகாது என்பதுடன், ஏற்கனவே விதிகள் 56 மற்றும் 57 ன்படி எடுக்கப்பட்ட நடவடிக்கையை நிறுத்திட மேற்படி மனுதாரருக்கோ, உரிமையாளருக்கோ உரிமை வழங்கப்படவில்லை.

விதி 10-ல் C ன்படி

மனைப்பிரிவில் உள்ள ஒவ்வொரு மனைக்கும் உரிய கட்டணங்கள் பெறப்பட்ட பின்னர் விதி எண். 2(2)(i) ன்படி மனையிடத்தின் உரிமையாளரின் உரிமையை உறுதி செய்து மனையை வரன்முறைப்படுத்துவதற்கான ஆணையை பிறப்பிக்க வேண்டும்.

ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட ஒவ்வொரு தனித்த மனைக்கும் வரன்முறைப்படுத்த சம்பந்தப்பட்ட மனை உரிமையாளர்கள் உரிய கட்டணங்களை செலுத்தி விண்ணப்பித்து உள்ளாட்சியால் வரன்முறைப்படுத்திக்கொள்ள வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

2/3/18

**இணைப்பு** :
மனைப்பிரிவு வரைபடம்-(2 மட்டும்)

**உறுப்பினர் செயலர் (பொறுப்பு)**
**கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்,**
**கோயம்புத்தூர் - 12.**

2/3/18

பெறுநர்

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்.

நகல்

1. மனுதாரர்
   Mr.S.M.Noorudheen Shajahan,
   A M I Mid Town,
   25A4/1,D B Road,R S Puram,
   Coimbatore-641002.

R. Mohmmm   Sowdha

2. உதவி இயக்குநர்
நில அளவைப்பதிவேடுகள் துறை,
கோயம்புத்தூர் மாவட்டம்.
இணைப்பு:வரைபடம் நகல்-(1மட்டும்)

3. வட்டாட்சியர்,
தெற்கு வட்டம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.
இணைப்பு:வரைபடம் நகல்-(1மட்டும்)

4. சார்பதிவாளர்,
2 நீர் இணை சார் பதிவகம்,
கோயம்புத்தூர்.
இணைப்பு:வரைபடம் நகல்-(1மட்டும்)

Sowdha